# முதலாளிக்கு விலை நிலவரங்களை சொல்லும் தொழிலாளி

திரு. செல்வராஜ்,
தட்டும்மல் கிராமம்,வடசருக்கை,
பாபநாசம் தாலுக்கா
அலைபேசி: 09443394424



நான் செல்வராஜ் 55 வயது விவசாய குடும்பத்தில் பிறந்தவன். எனது குடும்பம் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்துவது. நான் அறியலூர் மாவட்டத்தை சேர்ந்தவன்.தஞ்சாவூர் மாவட்டம் வடசருக்கை கிராமத்தில் தென்னந்தோப்புகளை பார்த்துக் கொள்ளும் பொருப்பில் அமர்த்தப்பட்டேன். 1200 தென்னை மரங்களுக்கிடையே குடிசையில் குடியிருக்கிறேன்.தென்னை மரங்களுக்கு வட்டப்பாத்தி எடுத்தல், சுத்தம் செய்தல், பூச்சி நோய் பராமரிப்பு அறுவடையின் போது உதவுதல் போன்ற வேலைகளை வேளையாட்கள் கொண்டு செய்வது எனது வேலையாகும்.எனது முதலாளி எனன சொல்கிறாரோ அதை செய்வது எனது வேலை. எனக்கு வெளி உலகம் தெரியாது என்னிடம் உள்ள அலைபேசி மூலம் மற்றவர்களை தொடர்பு கொள்வேன். ஏதாவது புதிய தொழில் நுட்பம் வந்தால் பயன்படுத்திப் பார்ப்பேன்.

நாங்கள் அனைவருமே தேங்காய் வியாபாரிகள் சொன்ன விலைக்குத் தான் இதுவரை விற்பனை செய்து வந்தோம்.

இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கும்பகோணம் சந்தை பகுப்பாய்வாளர் மூலம் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் சேவையை பற்றி அறிந்து என்னுடைய அலைபேசி எண்ணை பதிவு செய்தேன். என்னுடையது நோக்கியா செல்போன். தினமும் மதியம் 2.30 மணிக்கு விலை நிலவரங்களை தெரிந்து கொள்வேன்.கடந்த சில மாதங்களாக தினசரி தேங்காய் விலை திருச்சி சந்தை நிலவரம் மற்றும் கும்பகோணம் சந்தை நிலவரம் தினம் தெரிந்து கொண்டு வியாபாரிகளுடன் சண்டையிட்டு கூடுதலாக விலை பெற முடிகிறது. எங்கள் நண்பர்களிடம் என்னிடமும் வியாபாரிகள் காய் வாங்க வரும் பொழுது கண்டிப்பாக மற்றவர்களுக்கு கொடுப்பதை விட 50 பைசா வரை கூடுதலாக ஒரு காய்க்கு விலை கிடைக்கிறது. கண்டிப்பாக இந்த சேவையை பயன்படுத்திய பிறகு தான் இந்த கூடுதல் லாபம் தெரிகிறது.

தினசரி விலை நிலவரங்களை எனது முதலாளிக்கு தெரியப்படுத்தி கூடுதல் விலைக்கு விற்க யோசனை சொல்வேன். எனது இந்த சேவையை முதலாளியும் பயன்படுத்த அவரையும் இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வைத்துள்ளேன்.